**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.5/2025 அதன் அ.வ.எண்.496/2021**

1) அற்புதமணி
2) பாலமுருகன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

–எதிர்–

கணேசன் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு என்முன்பாக 09.01.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.செல்வம் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்த போதிலும் ஆஜராகவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சங்கர் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்த போதிலும் ஆஜராகவில்லை. இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே மனுதாரர்கள் தரப்பில் 2 ம் மனுதாரர் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் என்றும், 2 ம் மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும்

இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்க மேற்படி ஆவணங்களானது அவசியமானது என்றும், எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

இம்மனு சட்டப்படியோ, பொருண்மைகளின் படியோ நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது மனுதாரர்கள் அனுபவத்தில் உள்ளார்கள் என்பதை காட்டுவதற்கு அவசியம் இல்லாத ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு அனுமதிப்பதற்கு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6.1) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். அசல் வழக்கானது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு கட்சியை நிரூபிக்கக் கூடிய வகையில், பிராது தபசில் சொத்திற்கான கிராம அடங்கல் பதிவேடு, வங்கி கணக்கு புத்தக பதிவுகள் மற்றும் தொடர்புடைய வருவாய் ஆவணங்கள் ஆகியவைகளை மனுதாரர்கள் பக்க ஆவணங்களாக குறியீடு செய்யும் பொருட்டு பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது தற்போது பிரதிவாதிகள் தரப்பில் மேலும் சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் தரப்பில் அவர்கள் கூறும் ஆவணங்களை குறியீடு செய்தால் தான் இந்த வழக்கில் சரியாக தீர்வு காண்பதற்கு உதவுவதற்கு வாய்ப்பு இருந்தாலும் இருக்கலாம் என்பதாலும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் சம்மந்தமாக குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்டுக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதை அறிய முடிகிறது.

9) 2ம் மனுதாரர் ஏற்கனவே பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே, மனுதாரர்கள் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து மட்டும் தான் கூடுதல் சாட்சியம் அளிக்க வேண்டும். மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே தங்களது சாட்சியத்தில் உள்ள குறைகளை சரி செய்வது சம்மந்தமாக எந்தவித சாட்சியத்தையும் அளிக்கக் கூடாது. மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தைப் பொறுத்து மட்டும் தான் சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கப்படுகிறது. மற்ற எந்த சங்கதியையும் பொறுத்து சாட்சியத்தை அளிக்க அனுமதி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாகவும், நீதியின் நலன் கருதியும், வழக்கின் தன்மை

மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை செலவு தொகையுடன் அனுமதித்து உத்திரவிடலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, மனுதாரர் ரூ.500/– எதிர்மனுதாரருக்கு 12.01.2026 க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 12.01.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
orders uploaded on 09.01.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.01.09 16:09:40 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
orders uploaded on 09.01.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.01.09 16:09:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2025 இன்</u>**
**<u>அ.வ.எண்.496/2021</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**09.01.2026.**